(ஆ) திரு. வடக்குத்திய தேவரின் ஆக்கிரமிப்பை வெளியேற்ற திருவில்லிபுத்தூர் வட்டாட்சியர் நடவடிக்கை எடுத்தார். இந்த நடவடிக்கையை எதிர்த்து திரு. வடக்குத்திய தேவர் திருவில்லிபுத்தூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் 688/78 எண்ணிட்ட உரிமையியல் வழக்கு மற்றும் 1117/78 எண்ணிட்ட உறுத்துக் கட்டளை மனு தொடர்ந்துள்ளார். வழக்கை எதிர்த்து எதிர் ஆணையுறுதிப் பத்திரம் மற்றும் எழுதிய வாக்குமூலம் 24—1—79 அன்று தாக்கல் செய்யப்பட்டன. வழக்கு முடிந்து தீர்ப்புரை கிடைத்த பின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இயற்றுகிற சட்டமும், நீதித் துறையும் பணக்காரர்களுக்கு ஆதரவாகத்தான் இருக்கிறது. ஏழை எளியவர்களுக்கு ஆதரவாக இல்லை. ஆதலால் இந்த அரசாங்கம் ஏழை எளியவர்களின் அரசாங்கமாக இருப்பதால், ஏதாவது ஒவர் ஹுக் பண்ணி சுடுகாட்டுக்கு நிலத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரசாங்கம் வேண்டுமென்றால, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும். ஆனால் நீதிமன்றம் அனுதாபம் தெரிவிக்காது.

மிருகண்டா நதியின் குறுக்கே நீர்த் தேக்கம்.

*வினா எண் 727—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கலசபாக்கம் தொகுதியில் உள்ள மேல சோழங்குப்பம் கிராமம் அருகில் மிருகண்டா நதியின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன ?

(இ) வேலை எப்போது துவங்க உத்தேசம் ?

(ஈ) அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—

(அ) இல்லை.

(ஆ), (இ) மற்றும் (ஈ) : இக் கேள்விகளுக்கு இடமில்லை.